Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
STC NO. 1183 /2020

**Depostitions of PW- 4 Witness for**

| | |
|---|---|
| Name | இராமசாமி என்ற குமார் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of January 2024.

Signature of Witness.

<u>08.01.2024</u>

எதிரி ஆஜர்

**<u>முதல் விசாரணை–</u>**

நான் தற்போது மேல தொட்டியபட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். 09.01.2016 அன்று இரவு 07.30 மணியளவில் நானும், எனது அண்ணன் முறையான அ.சா.3 நாராயணன் என்பவரும் பின்ளையார் நத்தம் விலக்கு பஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது போலீசார் அங்கு வந்து படம் வரைந்து எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். நாங்கள் போட்டுக்கொடுத்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**–

நான் சொந்த காடு வைத்து விவசாயம் செய்து வருகிறேன். போலீசார் கையெபத்து வாங்கியபோது நான் எங்கு இருந்தேன் என்றால் திருவில்லிபுத்தூர் டவுனுக்கு செல்வதற்காக பஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தேன். திருவில்லிபுத்தூருக்கு பஸ் ஏற வேண்டும் என்றால் பூவாணி விலக்கிற்கு முன்னாடியுள்ள பேருந்து நிறுத்தத்தில் தான்பஸ் ஏற வேண்டும் என்றால் சரிதான். பிள்ளையார் நத்தம் பேருந்து நிறுத்தத்தில் நின்றேன் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மதுரை நோக்கியும், கிருஷ்ணன்கோவில் நோக்கியும் செல்லும் பேருந்துகள் தான் பிள்ளையார்நத்தம் பேருந்து நிறுத்தத்தில் நிற்கும் என்றால் சரிதான். எங்கள் ஊர் பிள்ளையார் நத்தத்தில் இருந்து பிள்ளையார் நத்தம் விலக்கிற்கு வருவதற்கு 2 கி. மீ உள்ளது. பொதுவாக இருசக்கர வாகனம் மூலமாக தான் வருவோம். இருசக்கர வாகனத்தில் தான் டவுனுக்கு போனேன் என்றால் இல்லை. இருசக்கர வாகனத்தில் தான் பிள்ளையார் நத்தம் விலக்கிற்கு வந்தேன். எனக்கு படிக்க எழுத தெரியும். போலீசார் என்னிடம் எழுதப்பட்ட தாளில் பஸ்டாப்பில் வைத்து தான் கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு படித்து காட்டினார்கள். எனக்கு புரிந்தது. நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தென்று எனக்கு தெரியாதென்றும், நான்போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி நாராயணன் எனக்கு அண்ணன் முறையாவார்.